# Tnpsc Model Question Paper 29 – General Studies in Tamil

Click Here to Download More Tnpsc Model Questions

1. --------- மாவட்டம், அதிக மனித வள மேம்பாட்டு குறியீட்டில் இடம் பெறவில்லை
(அ) கன்னியாகுமரி (ஆ) திருநெல்வேலி (இ) தூத்துக்குடி **(ஈ) மதுரை**

2. பின்வருவனவற்றில் எது சரியாக பொருந்துகிறது?
1. GSDP – அரசு சிறப்பு மாவட்டத்திட்டம்
2. GSVA – மொத்த மாநில மதிப்புக் கூட்டப்படுதல்
3. RKVY – ராஷ்ட்ரிய கிரிஷி விகாஸ் யோஜனா
4. PMKSY – பிரதம மந்திரி கிரிஷி சுரக்ஷா யோஜனா
(அ) 1 மற்றும் 3 சரியானவை (ஆ) 1 மற்றும் 2 சரியானவை
**(இ) 2 மற்றும் 3 சரியானவை** (ஈ) 3 மற்றும் 4 சரியானவை

3. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அடிப்படை --------- மாதிரி
(அ) ஹெராட்–டோமர் மாதிரி **(ஆ) மஹலநோபிஸ் மாதிரி**
(இ) சும்பீட்டர் மாதிரி (ஈ) நர்க்ஸ் மாதிரி

4. 2011 மக்கள் தொகையின் கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் மிகக்குறைந்த கல்வியறிவு விகிதம் ---------- மாநிலத்தில் இருந்தது
(அ) ஜார்கண்ட் **(ஆ) பீகார்** (இ) அருணாசலப்பிரதேசம் (ஈ) தமிழ்நாடு

5. அறிவியல் மற்றும் தொழிற்துறை ஆராய்ச்சி மையத்தின் தலைவர்
(அ) உள்துறை அமைச்சர் (ஆ) தொழில்துறை அமைச்சர்
**(இ) பிரதம மந்திரி** (ஈ) நிதி அமைச்சர்

6. சரியான விடையினைத் தேர்ந்தெடுக்கவும், அரசாங்கத்தின் வருவாயின் ஆதாரங்கள்
1. வரி வருவாய்
2. வரியில்லா வருவாய்
3. பொதுத்துறை நிறுவனங்களின் உபரி
(அ) 1 மட்டும் (ஆ) 2 மட்டும் (இ) 1 மற்றும் 2 **(ஈ) 1, 2 மற்றும் 3**

7. நிதி ஆயோக்கின் (NITI Aayog) தலைவர்
(அ) இந்தியக் குடியரசுத் தலைவர் **(ஆ) இந்திய பிரதமர்**
(இ) இந்திய நிதி அமைச்சர் (ஈ) இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர்

8. "தென்னாப்பிரிக்காவில் சத்யாகிரகம்" என்னும் நூலை மகாத்மா காந்தி எப்பொழுது வெளியிட்டார்?
**(அ) 1928** (ஆ) 1927 (இ) 1926 (ஈ) 1930

9. ஒத்துழையாமை இயக்கத்தின் போது காந்திஜி எந்த பட்டத்தை திருப்பி அளித்தார்?
(அ) நைட்குட் (ஆ) ராய் பகதூர் **(இ) கெய்சர்–இ–ஹிந்த்** (ஈ) ஹிந்த் கெய்சர்

10. தமிழ்நாட்டில் விற்பனை வரி யாரால் அறிமுகப்படுத்தப்பட்டது?
**(அ) இராஜாஜி** (ஆ) சி.என்.அண்ணாதுரை (இ) காமராசர் (ஈ) பக்தவச்சலம்

11. அம்பேத்காரால் ஆரம்பிக்கப்பட்ட அரசியல் கட்சி

**(அ) இந்தியக் குடியரசுக் கட்சி** (ஆ) கம்யூனிஸ்ட் கட்சி

(இ) கதார் கட்சி (ஈ) அகில இந்திய ஃபார்வர்ட் பிளாக்

12. இந்திய தேசிய காங்கிரஸின் எந்த அமர்வில் தேசியப் பாடலான "வந்தே மாதரம்" முதன் முதலில் பாடப்பட்டது?

(அ) மும்பை–1896 (ஆ) வாரணாசி–1896 (இ) லாகூர்–1896 **(ஈ) கல்கத்தா–1896**

13. தன்னாட்சித் தத்துவமான "இந்தியா இந்தியர்களுக்கே" என்னும் கூற்றை முதலில் வெளியிட்டவர்---------

(அ) சுவாமி விவேகானந்தர் **(ஆ) சுவாமி தயானந்த சரஸ்வதி**

(இ) மகாத்மா காந்தி (ஈ) தாதாபாய் நௌரோஜி

14. காமராசரின் அரசியல் குரு ----

(அ) நேரு (ஆ) காந்திஜி **(இ) சத்தியமூர்த்தி** (ஈ) அண்ணாதுரை

15. கோடிட்ட இடத்தை நிரப்புக:

சீன மிசிரம் யவனரகம் – இன்னும்
 தேசம் பலவும் புகழ்வீசிக் – கலை
ஞானம் படைத்தொழில் வாணிபமும் – மிக
 நன்று வளர்த்த -------

**(அ) தமிழ்நாடு** (ஆ) தேசியத் திருநாடு (இ) நாவலம் நன்நாடு (ஈ) தாய்நாடு

16. "செந்தமிழ்த் தேனீ, சிந்துக்குத் தந்தை!
குவிக்கும் கவிதைக் குயில்! இந்நாட்டினைக்
கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் கவியரசு"
– இந்தப் பாடலோடு தொடர்புடைய இருவர் யார்?

(அ) பாரதியார், அப்துல் ரகுமான்

(ஆ) கலைஞர் கருணாநிதி, வைரமுத்து

(இ) கண்ணதாசன், பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்

**(ஈ) பாரதியார், பாரதிதாசன்**

17. இராமாயணத்தில் சுந்தரன் என்னும் பெயரால் அழைக்கப்படுபவர் யார்?

(அ) இராமன் (ஆ) இலக்குவன் (இ) விபீடணன் **(ஈ) அனுமன்**

18."தமிழ் நாட்டின் ரூசோ" என்று அழைக்கப்படுபவர்

(அ) ராஜாஜி (ஆ) சத்தியமூர்த்தி (இ) சி.என்.அண்ணாதுரை **(ஈ) தந்தை பெரியார்**

19. சி.என்.அண்ணாதுரை அமைச்சரவையில் வேளாண்துறை அமைச்சராக இருந்தவர் யார்?

(அ) நெடுஞ்செழியன் (ஆ) மாதவன் (இ) சாதிக் பாட்ஷா **(இ) கோவிந்தசாமி**

20. 1929 பிப்ரவரி 17ல் செங்கல்பட்டில் நடந்த சுயமரியாதை இயக்கத்தின் முதல் மாநாட்டிற்கு தலைமை தாங்கியவர் யார்?

**(அ) டாக்டர்.பி.சுப்பராயன்** (ஆ) ஈ.வே.ராமசாமி (இ) பி.டி.ராஜன் (இ) பனகல் ராஜா

21. நீதிக்கட்சி சென்னை மாகாணத்தில் ஆட்சியில் இருந்த காலம்

(அ) 10 ஆண்டுகள் **(ஆ) 13 ஆண்டுகள்** (இ) 15 ஆண்டுகள் (ஈ) 16 ஆண்டுகள்

22. கோடிட்ட இடத்தை நிரப்புக:
நெருதல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும் -------- உடைத்துஇவ் வுலகு
**(அ) பெருமை** (ஆ) பொருநர் (இ) கடுமை (ஈ) சிறுமை

23. "செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு"
இக்குறள் கூறும் இடைவிடாத கடமை எது?
(அ) பொருளீட்டுதல் (ஆ) தொண்டு செய்தல்
**(இ) விருந்தோம்பல்** (ஈ) குடும்பத்தைக் காத்தல்

24. அறிவுடையவரின் நட்பு பிறைமதி போல நிறைந்து வருவது எனக்கூறும் வள்ளுவர், யாருடைய நட்பு முழுமதி தேய்வதைப் போன்றது எனக் கூறுகிறார்?
(அ) அறிவுரையார் **(ஆ) அறிவில்லாதவர்** (இ) அன்புடையவர் (ஈ) அன்பிலாதவர்

25."எல்லாப் பொருளும் இதன்பாலுல; இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால்"
என்று திருக்குறளைச் சிறப்பிப்பவர் யார்?
(அ) ஔவையார் (ஆ) எறிச்சலூர் மலாடனார்
**(இ) மதுரைத் தமிழ்நாகனார்** (ஈ) மாங்குடி மருதனார்

26. கிண்டலாக அறிவுரை சொல்கின்ற ஒரு வகை வாய்மொழி இலக்கியத்தின் பெயர்
(அ) விடுகதை **(ஆ) சொலவடை** (இ) பிசி (ஈ) பழமொழி

27. "திருப்பனந்தாள் காசி மடத்தை நிறுவியவர் யார்?
(அ) காளமேகப் புலவர் (ஆ) ஞான சம்பந்தர் (இ) அருணகிரிநாதர் **(ஈ) குமரகுருபரர்**

28. பத்துப்பாட்டில் செம்பாதி எவ்வகை நூல்கள்?
(அ) அக நூல்கள் (ஆ) புற நூல்கள் **(ஈ) ஆற்றுப்படை நூல்கள்** (ஈ) அகப்புற நூல்கள்

29. "இந்திய மருந்து" எனக் கிரேக்க மருத்துவர் ஹிப்போகிரேட்டஸ் கூறிய பொருள்
**(அ) மிளகு** (ஆ) மஞ்சள் (இ) வேம்பு (ஈ) பட்டை

30. 2020-21 ஆம் ஆண்டு புள்ளி விவரப்படி, தமிழ்நாட்டில் உள்நாட்டு உற்பத்தியில் அதிக பங்கு வகிப்பது
(அ) வேளாண்மை (ஆ) தொழில்துறை (இ) சுரங்கம் **(ஈ) பணிகள்**

31. ASHA என்பது
**(அ) அங்கீகரிக்கப்பட்ட சமூக சுகாதார செயல்பாட்டாளர்**
(ஆ) அங்கீகரிக்கப்பட்ட சுய உதவி நடவடிக்கைகள்
(இ) ஆயுஷ் சுத்தம் மற்றும் சுகாதார நடவடிக்கைகள்
(ஈ) சமூக சுகாதார நடவடிக்கைகளுக்கான அமைப்பு

32. கீழ்க்கண்டவற்றில் பெண்களின் சமூக நீதிக்காக வழங்கப்பட்டுள்ள உரிமைகளை அதன் அரசியலமைப்புப் பிரிவகளோடுப் பொருத்துக:
**அரசிலமைப்பு உட்பிரிவு** **உரிமைகள்**

அ. உட்பிரிவு 14 1. வேலைவாய்ப்பில் சமவாய்ப்பு
ஆ. உட்பிரிவு 15 2. பேச்சுரிமை
இ. உட்பிரிவு 16 3. பாகுபாடின்மை
ஈ. உட்பிரிவு 19 4. சம உரிமை

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 3 | 2 | 2 | 4 |
| **ஆ.** | **4** | **3** | **1** | **2** |
| இ. | 2 | 3 | 4 | 1 |
| ஈ. | 4 | 3 | 2 | 1 |

33. மதிய சத்துணவுத் திட்டத்தில் வாரத்திற்கு ஐந்து முட்டைகள்/வாழைப்பழங்கள் என அறிமுகப்படுத்திய முதலமைச்சரைக் கண்டறிக:
(அ) காமராஜ் (ஆ) ராஜாஜி (இ) அண்ணா **(ஈ) கருணாநிதி**

34. தமிழ்நாடு எதில் வளமானது?
(அ) வன வளம் **(ஆ) மனித வளம்** (இ) கனிம வளம் (ஈ) தண்ணீர் வளம்

35. கூற்று: இந்தியாவிலேயே அதிக காற்றாலை ஆற்றல் திறன் கொண்ட மாநிலம் தமிழ்நாடு.
காரணம்: இம்மாநிலம் மிக உயர்ந்த தரமான கடலோரக் காற்றாலை ஆற்றலைக் கொண்டுள்ளது.
**(அ) (A) மற்றும் (R) இரண்டும் சரி (R) மேலும் (A)ன் விளக்கம்**
(ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R), (A)ஐ விளக்கவில்லை
(இ) (A) சரி ஆனால் (R) தவறு
(ஈ) (A) தவறு ஆனால் (R) சரி

36. கீழ்க்கண்டவற்றைப் பொருத்துக:

| நிகழ்வுகள் | வருடம் |
|---|---|
| அ. தேசிய ஊரக சுகாதாரத் திட்டம் | 1. 1992 |
| ஆ. தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டம் | 2. 2019 |
| இ. தேசிய மருத்துவக் குழுச்சட்டம் | 3. 1939 |
| ஈ. தமிழ்நாடு பொதுச் சுகாதாரச் சட்டம் | 4. 2005 |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 1 | 3 | 4 | 2 |
| ஆ. | 1 | 2 | 3 | 4 |
| இ. | 2 | 1 | 3 | 4 |
| **ஈ.** | **4** | **1** | **2** | **3** |

37. சத்ய ஷோடக் சமாஜ் – அமைப்பின் நிறுவனர் யார்?
(அ) காந்தி (ஆ) அம்பேத்கர் **(இ) ஜோதிராவ் பூலே** (ஈ) ராஜா ராம் மோகன்

38. ஆதி திராவிட மகாஜன சபை என்று பின்நாட்களில் அழைக்கப்பட்ட பறையர் மஹாஜன சபையை தோற்றுவித்து வழிநடத்தியவர் யார்?
(அ) அயோத்தி தாஸர் **(ஆ) ரெட்டமலை சீனிவாசன்**
(அ) ராஜா (ஈ) மேற்கணடவற்றுள் எதுவுமில்லை

39. மனித வள மேம்பாட்டுப் புள்ளியியல், அமர்த்யாசென் குறிப்பிட்ட "திறன்கள் அணுகுமுறை" யானது ––––––––––ஐ புரிந்து கொள்வதற்காக உருவாக்கப்பட்டது.

(அ) கல்வி **(ஆ) மனித நல வாழ்வு** (இ) மகிழ்ச்சி (ஈ) தேசிய வருமானம்

40. ஒரே நேரத்தில் இரு பகடைகள் உருட்டப்படுகின்றன. பகடையில் இரண்டு முகங்களிலும் ஒரே எண்ணாக இருக்க நிகழ்தகவு

(அ) 1/36 (ஆ) 1/3 **(இ) 1/6** (ஈ) 2/3

41. ஒரு உலோகக் கலவையில் தாமிரம் மற்றும் துத்தநாகத்தின் விகிதம் 5:3 அவ்வுலோகக் கலவையில் தாமிரத்தின் எடை 30.5 கிராம் துத்தநாகத்தின் எடை

(அ) 15.8 கிராம் (ஆ) 16.5 கிராம் (இ) 18.3 கிராம் **(ஈ) 50.8 கிராம்**

42. ஒரு மணி நேரத்தில் 2 நிமிடங்கள் என்பது எத்தனை சதவீதம் ஆகும்?

(அ) 3 1/2% **(ஆ) 3 1/3%** (இ) 3 1/4% (ஈ) 3 1/5%

43. 12+10 = 1205

11+8 = 885 எனில்

14+15 = ?

(அ) 1005 (ஆ) 120 (இ) 710 **(ஈ) 2105**

44. பின்வருவனவற்றுள் எவை பித்தாகொரியனின் மூன்றின் தொகுதிகள்

(அ) (20, 22, 29) (ஆ) (20, 21, 29) **(இ) (20, 21, 29)** (ஈ) (22, 21, 29)

45. P என்பவர் தனியே ஒரு வேலையின் 1/2 பகுதியை 6 நாட்களிலும், Q என்பவர் தனியே அதே வேலையின் 2/3 பகுதியை 4 நாட்களிலும் முடிப்பர். இருவரும் இணைந்து அந்த வேலையின் 3/4 பகுதியை எத்தனை நாட்களில் முடிப்பர்?

**(அ) 3** (ஆ) 6 (இ) 12 (ஈ) 15

46. 'a' அலகு பக்க அளவுள்ள ஒரு சதுரத்திலிருந்து வெட்டியெடுக்கப்படும் மிகப்பெரிய வட்டத்தின் பரப்பளவு காண்க: (தோராயமாக)

**(அ) 11/14 $a^2$ ச.அ** (ஆ) 3/14 $a^2$ ச.அ (இ) 3/7 $a^2$ ச.அ (ஈ) 9/14 $a^2$ ச.அ

47. காலாண்டிற்கு ஒரு முறை வட்டி கணக்கிடும் முறையில் ரூ.15, 625க்கு ஆண்டிற்கு 16% வட்டி வீதத்தில் 9 மாதங்களுக்கு கிடைக்கும் கூட்டு வட்டியைக் காண்

(அ) ரூ.1851 (ஆ) ரூ.1941 **(இ) ரூ.1951** (ஈ) ரூ.1961

48. குறிப்பிட்ட ஆண்டுகளில் ஒரு அசலானது ஆண்டுக்கு 5% வட்டி வீதத்தில் 4 மடங்காகிறது. அதே அசலானது. அதே ஆண்டுகளில் 8 மடங்காக வேண்டுமெனில் தனிவட்டி வீதம் என்ன?

(அ) 11 3/5% **(ஆ) 11 2/3%** (இ) 12 3/5% (ஈ) 12 2/3%

49. x ஐக் காண்க:

X:26 : : 5:65

(அ) 1 **(ஆ) 2** (இ) 3 (ஈ) 4

50. இரு எண்களின் மீ.பொ.ம 432 மற்றும் அவற்றின் மீ.பொ.கா 36. ஓர் எண் 108 எனில், மற்றோர் எண்.

(அ) 36 (ஆ) 108 **(இ) 144** (ஈ) 432

51. $-9a^3 b^2$, $12a^2b^2c$ இன் மீ.பொ.ம காண்க:

(அ) −36 $a^2b^2c$ (ஆ) −36 $a^3b^2c$ (இ) 36 $a^3b^2c$ (ஈ) 36 $a^5b^4c$

52. 1+4+16+……என்ற தொடரின் எத்தனை உறுப்புக்களை கூட்டினால் கூடுதல் 1365 கிடைக்கும்?
(அ) 5 **(ஆ) 6** (இ) 4 (ஈ) 3

53. ஒரு கடிகாரம் கணாணடியில் பார்க்கும் போது நேரம் 3 மணி 15 நிமிடங்களாக உள்ளது எனக் காட்டுகிறது எனில் கடிகாரத்தின் சரியான நேரம்
(அ) 9 மணி 45 நிமிடங்கள் (ஆ) 9 மணி 15 நிமிடங்கள்
**(இ) 8 மணி 45 நிமிடங்கள்** (ஈ) 3 மணி 15 நிமிடங்கள்

54. இரு நாணயங்கள் ஒரு முறை சுண்டப்படும் பொழுது இரண்டிலும் வெவ்வேறு முகங்கள் கிடைக்க நிகழ்தகவு காண்க:
(அ) 1/8 **(ஆ) 1/2** (இ) 13/6 (ஈ) 1/4

55. ஒரு மீன் தொட்டியானது 3.8 மீ x 2.5 மீ x 1.6 மீ என்ற அளவுகளை உடையது. இந்த தொட்டியானது எத்தனை லிட்டர் தண்ணீர் கொள்ளும்?
(அ) 1520 லிட்டர் **(ஆ) 15200 லிட்டர்** (இ) 15.21 லிட்டர் (ஈ) 1521 லிட்டர்

56. 254 மற்றும் 508 ஆகிய எண்களை வகுக்கும் போது மீதியாக 4−ஐ தரும் மிகச்சிறிய எண்
(அ) 6 (ஆ) 258 **(இ) 512** (இ) 1024

57. $10000^{10000} + 11111^{11111}$ ன் ஒன்றாம் இலக்கம்
(அ) 0 (ஆ) 3 **(இ) 1** (ஈ) 5

58. சோழன் சீரான வேகத்தில் நடந்து 6 கி.மீ தொலைவை 1 மணி நேரத்தில் கடக்கிறார். அதே வேகத்தில் அவர் 20 நிமிடங்களில் நடந்து கடக்கும் தொலைவு எவ்வளவு?
(அ) 1 கி.மீ **(ஆ) 2 கி.மீ** (இ) 3 கி.மீ (ஈ) 4 கி.மீ

59. கூட்டு வட்டி வீதம் ஆண்டுக்கு 12% என்ற வீதத்தில் 1/2 ஆண்டுக்கு ஒரு முறை கணக்கிடப்படும் எனில் ரூ.5, 000 செலுத்தப்பட்ட பின் ஒரு வருடம் கழித்து மொத்த தொகை
(அ) ரூ.5, 648 **(ஆ) ரூ.5, 618** (இ) ரூ.5, 678 (ஈ) ரூ.5, 668

60. ரூ.5, 000 ஆனது, 8% வட்டி வீதத்தில் எத்தனை ஆண்டுகளில், ரூ.5, 800 ஆக மாறும்
**(அ) 2 ஆண்டுகள்** (ஆ) 4 ஆண்டுகள் (ஈ) 3ஆண்டுகள் (ஈ) 5 ஆண்டுகள்

61. A : B = 2:3 மற்றும் B : C = 4:5 எனில் C : A ன் விகிதம்
(அ) 5:4 (ஆ) 5:20 (இ) 8:15 **(ஈ) 15:8**

62. 156 மற்றும் 124 ஆகிய எண்களின் மீ.பொ.ம
**(அ) 4836** (ஆ) 3846 (இ) 8346 (ஈ) 4683

63. 3 $\log_x 5$ = 1 எனில் x ன் மதிப்பு காண்க:
(அ) 5 (ஆ) 25 **(இ) 125** (இ) 625

64. 6160 மீ$^2$ பரப்பளவு கொண்ட கூரையில் விழும் மழை நீர் 14 மீ விட்டம் மற்றும் 10 மீ உயரம் கொண்ட ஒரு உருளை தொட்டியில் சேகரிக்கப்பட்டு இதனால் தொட்டி முழுமையாக நிரப்பப்படுகிறது எனில் கூரையில் விழும் மழை நீரின் உயரத்தைக் காண்க:

**(அ) 25 செ.மீ** (ஆ) 25 செ.மீ (இ) 0.25 செ.மீ (ஈ) 250 செ.மீ

65. அறிவியல் முறையைப் படிக்கும் சரியான வரிசையை தேர்வு செய்யவும்

1. அனுபவ சோதனை
2. கருதுகோள்
3. கவனிப்பு
4. முடிவுரை

**(அ) 3, 2, 1, 4** (ஆ) 2, 3, 1, 4 (இ) 1, 2, 3, 4 (ஈ) 3, 1, 2, 4

66. "அறிவியல் தாக்கம்" என்ற சொல்லினைப் பயன்படுத்தியவர்

(அ) மகாத்மா காந்தி "சுயசரிதை" **(ஆ) நேரு "கண்டறிந்த இந்தியா"**

(இ) கௌடில்யர் "அர்த்தசாஸ்திரம்" (ஈ) பிபின் சந்திரர் "நவீன இந்திய வரலாறு"

67. அறிவியலைக் கற்றுக் கொள்வதன் மூலம் தேர்ச்சிப் பெறக்கூடிய திறன்கள்

(அ) தொடர்புத் திறன் மற்றும் படைப்பாற்றல்

**(ஆ) படைப்பாற்றல் மற்றும் ஆர்வம்**

(இ) எழுதும் திறன் மற்றும் திறந்த மனப்பான்மை

(ஈ) திறந்த மனப்பான்மை மற்றும் தொடர்புத் திறன்

68. புரோகேரியோட்டுகள் -------- இராஜ்ஜியத்தில் உள்ளடக்கியுள்ளது.

(அ) பூஞ்சைகள் **(ஆ) மோனிரா** (இ) அனிமேலியா (ஈ) பிளாண்டே

69. பின்வருவனவற்றில் எந்த ஒன்று கடல் சூழல் அமைப்பில் இல்லாதது?

(அ) கழிமுகம் (ஆ) பவள பாறைகள் (இ) கடல் **(ஈ) ஏரி**

70. கீழ்க்காணும் நோய்களில் எது பாக்டீரியாவினால் ஏற்படுத்தப்படும் நோய் அல்ல?

(அ) மேகவெட்டை நோய் (ஆ) டியூபர்கலோஸிஸ் (காசநோய்)

(இ) வயிற்றுப்போக்கு **(ஈ) பொன்னுக்கு வீங்கி**

71. பகுத்தறிவுடன் சிந்தித்தல் என்பது

(அ) புதிய உத்திகளை உருவாக்குதல்

**(ஆ) கடந்த அனுபவத்தைக் காரணங்களோடு தொடர்புபடுத்துதல்**

(இ) திறந்த மனப்பான்மை உருவாக்குதல்

(ஈ) எதிர்காலத்தை அனுமானம் செய்தல்

72. தொடர்பற்ற எண் இணையைக் கண்டறியவும்

(அ) 23:29 **(ஆ) 19:25** (இ) 13:17 (ஈ) 3:5

73. பின்வரும் இந்திய தலைமைத் தேர்தல் ஆணையாளர்களை காலவரிசைப்படி வரிசைப்படுத்துக:

1. சுனில் அரோரா
2. ராஜீவ் குமார்
3. நவீன் சாவ்லா
4. சுஷில் சந்திரா

**(அ) 3, 1, 4, 2** (ஆ) 1, 2, 3, 4 (இ) 4, 3, 2, 1 (ஈ) 1, 2, 4, 3

74. கீழே கொடுக்கப்பட்டுள்ள மாநிலங்களுக்குள் மக்களவையில் அதிகமான இடங்களைப் பெற்ற மாநிலம்
**(அ) மேற்கு வங்காளம்** (ஆ) குஜராத் (இ) அஸ்ஸாம் (ஈ) இராஜஸ்தான்

75. 2009ஆம் ஆண்டு வேதியியலுக்கான நோபல் பரிசு -----------க்காக வழங்கப்பட்டது.
(அ) நோதிகளின் இயக்கப்பட்ட பரிணாமத்திற்கு
**(ஆ) ரைபோசோமின் கட்டமைப்பு மற்றும் செயல்பாடு பற்றிய ஆய்வுகள்**
(இ) டிஎன்ஏ வை பழுதுபார்க்கும் இயந்திரவியல் ஆய்வுகள்
(ஈ) ஜி-புரதம்-இணைந்த ஏற்பிகளின் ஆய்வுகள்

76. இந்தியாவின் எந்த மாநிலத்தில், பூமியைச் சுற்றி வரும் 10 செ.மீ அளவுள்ள பொருட்களைக் கண்காணிக்க முதல் வணிக விண்வெளி சூழ்நிலை விழிப்புணர்வு கண்காணிப்பகம் அமைக்கப்பட உள்ளது?
(அ) அசாம் **(ஆ) உத்தரகாண்ட்** (இ) மும்பை (ஈ) சென்னை

77. மேகாலயா தனிமாநிலமாக உருவான ஆண்டு
(அ) 1968 (ஆ) 1970 **(இ) 1972** (ஈ) 1973

78. ----------- மூலம் கிராமப்புற தொழிலாளர்களுக்கு வேலை மற்றும் ஊதியம உறுதி செய்யப்படுகிறது
**(அ) MGNREGA** (ஆ) SBM (இ) CSC (ஈ) SSA

79. UNFCCC-க்கான கட்சிகளின் மாநாட்டின் (cop 27) 27வது அமர்வு எகிப்தில் உள்ள ஷாம் எல் சேக் இல் 6-18 நவம்பர் 2022 வரை எதன் காரணமாக நடத்தப்படுகிறது?
**(அ) காலநிலைமாற்றம்** (ஆ) கார்பன் வரி
(இ) கார்பன் கால் அச்சு (ஈ) அழிவின் விளிம்பில் உள்ள உயிரினங்களைப் பாதுகாக்க

80. தென்மேற்கு ரயிலவேயின் தலைமையகம் எங்குள்ளது?
**(அ) ஹீப்ளி** (ஆ) அலகாபாத் (இ) புவனேஸ்வர் (ஈ) ஜபல்பூர்

81. கீழே கொடுக்கப்பட்டுள்ளவனவற்றுள் தரமிக்க நிலக்கரி என அறியப்படுவது எது?
(அ) புகைமிகு நிலக்கரி (ஆ) பழுப்பு நிலக்கரி **(இ) அனல் மிகு நிலக்கரி** (ஈ) பீட்

82. எந்த வகை இரும்பு தாது, இரும்பு ஆக்சைடு என அழைக்கப்படுகிறது?
**(அ) ஹேமடைட்** (ஆ) மேக்னடைட் (இ) லிமனைட் (ஈ) சிடரைட்

83.இந்தியாவின் முதல் வானிலை இயக்குநர் ஜெனரல்
(அ) வி.பி. சுப்ரமணியம் (ஆ) ஆர்.எல்.சிங்
(இ) கே.எல்.ராவ் **(ஈ) ஹச்.ஈ.பிளாண்டு ஃபோர்டு**

84. ஜெட் காற்றோட்டம் இந்திய பருவ காற்றில் எந்த பருவத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது?
(அ) தென்-மேற்கு பருவகாற்று **(ஆ) கோடை மற்றும் குளிர்காலம்**
(இ) பின்னடைவு பருவகாலம் (ஈ) மழைக்காலம்

85. குப்த ஆட்சியாளர்களை காலவரிசைப்படி அடுக்குக:

1. சமுத்திர குப்தர்
2. ஸ்ரீ குப்தர்
3. இரண்டாம் குமார குப்தர்
4. ராமா குப்தர்

**(அ) 2, 1, 4, 3** (ஆ) 2, 3, 4, 1 (இ) 4, 2, 3, 1 (ஈ) 4, 3, 1, 2

86. அரசியலமைப்பின் மற்றொரு துணிச்சலான கூறு என்னவென்றால் இது மதச்சார்பற்ற அரசை நிறுவ முயல்கிறது. கீழ்க்காணும் கூற்றுகளில் மதச்சார்பற்ற அரசு பற்றிய கருத்துகளில் பொருத்தமற்றது எது?
(அ) மதச்சமத்துவம் வழங்கப்பட்டுள்ளது
(ஆ) சிறுபான்மையினரின் பண்பாட்டுப் பாரம்பரியம் பாதுகாக்கப்பட்டுள்ளது.
(இ) தீண்டாமை ஒழிக்கப்பட்டது
**(ஈ) அதன் சில கருத்துக்கள் நாட்டின் இறையாண்மைக்கு எதிரானது**

87. கீழ்க்குறிப்பிடப்படுபவற்றில் பழைய கற்காலத்தில் வராத இடம் எது?
**(அ) சேலம்** (ஆ) மதுரை (இ) வல்லம் (ஈ) பல்லாவரம்

88. கீழே கொடுக்கப்பட்டுள்ள கண்டுபிடிப்புகளை அதனுடன் தொடர்புடைய காலத்தோடு பொருத்துக:

| | |
|---|---|
| 1. இரும்பின் கண்டுபிடிப்பு | அ. இடைக்கற்காலம் |
| 2. வெண்கலத்தின் கண்டுபிடிப்பு | ஆ. புதிய கற்காலம் |
| 3. விவசாயத்தின் துவக்கம் | இ. சிந்து சமவெளிப்பண்பாடு |
| 4. தீயின் கண்டுபிடிப்பு | ஈ. ஆரியர்கள் |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| **அ.** | **4** | **3** | **2** | **1** |
| ஆ. | 3 | 2 | 1 | 4 |
| இ. | 2 | 3 | 4 | 1 |
| ஈ. | 1 | 2 | 3 | 4 |

89. இந்திய அரசியலமைப்பின் முகவுரையிலுள்ள "சோசியலிஸ்ட்" என்ற வார்த்தையுடன் தொடர்புடைய அரசியல் சாசனத் திருத்தச் சட்டம்
(அ) 24வது அரசியல் சாசனத் திருத்தச்சட்டம் (ஆ) 28வது அரசியல் சாசனத் திருத்தச்சட்டம்
**(இ) 42 வது அரசியல் சாசனத் திருத்தச்சட்டம்** (ஈ) 44 வது அரசியல் சாசனத் திருத்தச்சட்டம்

90. கீழ்க்கொடுக்கப்பட்டுள்ள போர்கள் அவை நடந்த வருடத்தோடு பொருத்துக:

| | |
|---|---|
| அ. முதல் பானிபட் போர் | 1. 1527 |
| ஆ. காக்ரா போர் | 2. 1529 |
| இ. இரண்டாவது பானிபட் போர் | 3. 1526 |
| ஈ. கான்வா போர் | 4. 1556 |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 1 | 2 | 3 | 4 |
| **ஆ.** | **4** | **2** | **1** | **3** |
| இ. | 4 | 1 | 2 | 3 |
| ஈ. | 3 | 1 | 2 | 4 |

91. பின்வரும் ஆட்சியாளர்களின் யார் "கவிராஜா" என்றழைக்கப்பட்டார்?
(அ) முதலாம் குமாரகுப்தர் (ஆ) முதலாம் சந்திரகுப்தர்
(இ) சந்திரகுப்த விக்ரமாதித்தியா **(ஈ) சமுத்திரகுப்தர்**

92. சிந்து நாகரிகத்தில் அகழ்வாராய்ச்சி செய்யப்பட்ட இடங்களின் சரியான காலவரிசை எது?
(1) மொஹஞ்ச தாரோ
(2) சன்ஹீதாரோ
(3) ஹரப்பா
(4) லோத்தால்
**(அ) 3, 1, 2, 4** (ஆ) 1, 3, 2, 4 (இ) 2, 1, 3, 4 (ஈ) 3, 4, 2, 1

93. ஆம்புட்ஸ்மேன் என்னும் அமைப்பை முதலில் உருவாக்கிய நாடு
(அ) இந்தியா (ஆ) பின்லாந்து **(இ) சுவீடன்** (ஈ) நார்வே

94. கீழ்வருவனவற்றுள் எதுஎவை உச்சநீதிமன்ற நீதிபதியாகத் தேவையற்றது/தேவையற்றவை?
1. இந்தியக் குடிமகனாக இருத்தல்
2. ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உயர்நீதி மன்றங்களில் தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் நீதிபதியாகப் பணியாற்றி இருத்தல்
3. ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உயர்நீதி மன்றங்களில் தொடர்ச்சியாக 15 ஆண்டுகளுக்கு வழக்கறிஞராக இருத்தல்
(அ) 1 மட்டும் (ஆ) 1 மற்றும் 2 ஆகியன மட்டும் (இ) 2 மட்டும் **(ஈ) 3 மட்டும்**

95. இந்திய அரசமைப்பு விதி 264 முதல் 300 வரை பகுதி ---------ல் அடங்கும்
(அ) IX (ஆ) X (இ) XI **(ஈ) XII**

96. கீழே உயர்நீதிமன்றங்கள் மற்றும் அவை நிறுவப்பட்ட ஆண்டுகள் கொடுக்கப்பட்டுள்ளன. தவறான இணையை தேர்ந்தெடு:

| உயர்நீதிமன்றம் | நிறுவப்பட்ட ஆண்டு |
|---|---|
| அ. மதராஸ் | 1862 |
| ஆ. கர்நாடகா | 1884 |
| **இ. அலஹாபாத்** | **1954** |
| ஈ. கேரளா | 1958 |

97. மாநிலங்களவை பற்றிய பின்வரும் சொற்றொடர்களில் எவை சரியானவை?
1. இது ஒரு நிரந்தரமான அவை
2. ஒவ்வொரு இரண்டாம் ஆண்டின் முடிவிலும் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் ஓய்வு பெறுகின்றனர்
3. இவை இந்த அவையின் நிலையற்ற தன்மையைக் குறிக்கிறது
(அ) 1 மட்டும் **(ஆ) 1 மற்றும் 2 ஆகியன மட்டும்**
(இ) 2 மற்றும் 3 ஆகியன மட்டும் (ஈ) 3 மட்டும்

98. பின்வரும் அரசு வழிகாட்டு நெறிமுறைக் கோட்பாடுகளில் சமூகச் சிந்தனையைப் பிரதிபலிப்பது எது?
(அ) கிராமப் பஞ்சாயத்துகளை நிறுவுதல்
(ஆ) குடிசைத் தொழிற்சாலைகளை ஊக்குவித்தல்
**(இ) வாழ்வாதாரத்திற்கான வழிமுறைகளை போதுமான அளவு வழங்குதல்**
(ஈ) நினைவுச் சின்னங்களைப் பாதுகாத்தல்

99. ஒருவரது உயிரோ, உடல்சார் உரிமையோ சட்டம் விதித்தமைத்துள்ள நெறிமுறைப்படி அன்றி, வேறு எவ்வகையிலும் பறிக்கப்படுதல் ஆகாது". இங்ஙனம் கூறும் இந்திய அரசமைப்பு விதி எது?
(அ) விதி 20 **(ஆ) விதி 21** (இ) விதி 22 (ஈ) விதி 23

100. கீழ்க்கண்ட எந்த நாட்டு அரசியலமைப்புடன் இந்திய அரசியலமைப்பின் முகவுரை பெரும் பகுதி ஒத்துள்ளது?

(அ) பிரெஞ்சு அரசமைப்பு

**(ஆ) அமெரிக்க அரசமைப்பு**

(இ) ஜெர்மனி அரசமைப்பு

(ஈ) அயர்லாந்து அரசமைப்பு

winmeen.com